# மே 10

## *புனித அந்தோனினுஸ் (1389 – 1459)*

இவர் பதினாறு வயதில் புனித சுவாமிநாதரின் சபையில் சேர்ந்த தொடக்கத்திலிருந்தே புண்ணியத்தில் ஏனைய சந்நியாசிகளை விட சிறந்து விளங்கினார். குருப்பட்டம் பெற்ற பின் இன்னும் அதிக புண்ணியவான் ஆனார். மிகுந்த பக்தியுடன் திருப்பலி நிறைவேற்றுவார். கடும் தவ முயற்சிகள் செய்து உடலை கட்டுப்படுத்துவார். சபையின் சட்டங்களை நுணுக்கமாக அனுசரித்து ஏனைய சந்நியாசிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார். ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக அடிக்கடி பிரசங்கித்து ஆர்வத்துடன் உழைத்து நூல்கள் பல எழுதினார். இவர் பேராயர் ஆன பின்னும் புண்ணியங்களில் அதிகம் சிறந்து விளங்கினார். இவர் மிக மிக அன்புள்ளவர். கொள்ளை நோய் காலங்களில் நோயாளிகளுக்கு வீரத்துடன் சேவை செய்வார்.

### சிந்தனை:

ஒரு சாதாரண மனிதனின் குரலுக்குக் கீழ்ப்படிந்து பீடத்தில் வரும் இயேசுவின் தாழ்ச்சியை பிதாவுக்கு ஒப்புக் கொடுப்போம். தம் திருமகனது தாழ்ச்சியைக் குறித்து பிதா நம் மன்றாட்டுகளுக்கு இரங்குவார்.

### செபம்:

ஆண்டவரே, குருக்களும், விசுவாசிகளும், உயிருள்ள விசுவாசத்துடனும், ஆழ்ந்த தாழ்ச்சியுடனும், பற்றியெரியும் அன்புடனும் திருப்பலியை ஒப்புக் கொடுப்போம்.